DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.376/2022

Deposition of witness: PW2

| Name | சுந்தர்ராஜன், வங்கி துணை மேலளார், KVB வங்கி, பண்ருட்டி கிளை. | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சீனிவாசன் | Village | |
| Age | 39 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **07.08.2026.** | | | |

**(Accused present)**

**முதல் விசாரணை :**

நான் KVB வங்கி, பண்ருட்டி கிளை துணை மேலாளராக கடந்த 5 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பானை வந்ததன் பேரில் இன்று இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். நான் இன்று இந்த நீதிமன்றத்திற்கு துரைராஜ் என்பவரது 1645155000050461 என்ற எண் கொண்ட சேமிப்பு வங்கிக் கணக்கின் 01.01.2022 முதல் 31.05.2022 வரையிலான பரிவர்த்தனை பட்டியலை எடுத்து வரச்சொல்லி, மேற்படி அழைப்பாணையில் குறிப்பிட்டிருந்ததன் பேரில், அதனை இந்த நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். **மேற்படி பரிவர்த்தனை பட்டியல் ம.த.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 01.04.2022 தேதியில் துரைராஜ் கொடுத்த 000112 என்ற எண் கொண்ட காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்ற விவரம் அடங்கிய Statement ஐ எடுத்து வரச்சொல்லி, மேற்படி அழைப்பாணையில் குறிப்பிட்டிருந்தது. மேற்படி விவரம் ம.த.சா.ஆ–6 பரிவர்த்தனை பட்டியலிலேயே இடம் பெற்றுள்ளது என்பதனால், அது தொடர்பாக தனியாக எந்த ஆவணமும் நான் கொண்டுவரவில்லை. மேற்படி காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்றால், மேற்படி காசோலையானது போதிய பணமில்லை என்று காரணம் குறிப்பிடப்பட்டு, திருப்பப்பட்டுள்ளது. மேற்படி விவரம் குறிப்பிட்ட Inward Clearing Returns ஆவணத்தினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணமானது ம.த.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததனால் குறுக்கு விாசாரணையானது முடித்துக்கொள்ளப்பட்டது.**